தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 150/மா/2022**

**நாள் : 10.11.2022**

திரு. C. பிரபு
திருச்சிராப்பள்ளி – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
பொன்மலை கோட்டம்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கொட்டப்பட்டு, காளியம்மன்கோவில் தெரு, எண்.17–B–ல் வசிக்கும் திரு. C. பிரபு என்பவரின் 02.09.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.09.2022-ல் பெறப்பட்டு 150மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கொட்டப்பட்டு, காளியம்மன்கோவில் தெரு, எண்.17–B–ல் வசிக்கும் திரு. C. பிரபு என்பவர் தனது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

" திருச்சி மாநகராட்சி, பொன்மலை கோட்டம், கொட்டப்பட்டு கிராமத்தில் கடந்த 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பெய்த கனமழையின் காரணமாக வெள்ளம் ஏற்பட்டு பொதுமக்கள் மிகவும் சிரமம் அடைந்தனர். மேற்கண்ட கிராமத்தில் உள்ள பெரியகுளம் முதல் மாவடிகுளம் வரை செல்லும் வாய்க்காலில் பல பகுதிகள் ஆக்கிரமிப்பு செய்து உள்ளதால் வெள்ளம் ஏற்பட்டது என்ற புகாரினை மாவட்ட ஆட்சியரிடம் மனுவாக கொடுத்து அதன்படி மேல் நடவடிக்கைக்காக மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் உத்தரவின்படி திருச்சி கிழக்கு வட்டாட்சியர் அவர்களின் நேரடி மேற்பார்வையில் ஒரு வாரமாக நில அளவை செய்து ஆக்கிரமிப்பு குறித்த வரைபடத்துடன் கூடிய முழு தகவலும் திருச்சி மாநகராட்சி அதிகாரிகளிடம் கொடுத்ததும் கடந்த ஒரு வருடமாக எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் பொன்மலை கோட்ட உதவி ஆணையர் அவர்கள்

செயல்பட்டு வருகின்றார். எனவே இம்மனு மூலம் நீர்நிலை ஆக்கிரமிப்பு குறித்த முழு தகவலும் இருந்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கும் பொன்மலை கோட்ட உதவி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்தும் மற்றும் பெரியகுளம் முதல் மாவடி குளம் வரை செல்லும் வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்பு அகற்ற உத்தரவு வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி திருச்சிராப்பள்ளி பொன்மலைகோட்ட உதவி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ 21.09.2022 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 07.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 19.10.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைக்கப்பட்டனர்.

4) மனுதாரர் 19.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.

5) 19.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலை கோட்ட மண்டலம் –02 உதவி ஆணையர், இளநிலைப்பொறியாளர்கள் இருவர் மற்றும் நகர சார் ஆய்வாளர் ஆகியோர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

" திருச்சிராப்பள்ளி மாநகராட்சி முன்னாள் பொன்மலை கோட்டம் தற்போது மண்டலம் –02 கொட்டப்பட்டு கிராமத்தில் உள்ள பெரியகுளம் முதல் மாவடிகுளம் வரை செல்லும் வாய்க்காலில் (பொதுப்பணித்துறை) பல பகுதிகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்பது குறித்த புகார் மனு வரப்பெற்றதும் மண்டலம் 2 நகர சார் ஆய்வாளர், இளநிலைப்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் மண்டலம் 3 இளநிலைப்பொறியாளருடன் 17.10.2022 மற்றும் 18.10.2022 ஆகிய தேதிகளில் கூட்டு புலத்தணிக்கை மற்றும் நில அளவைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்கண்ட ஆக்கிரமிப்பு, பொதுப்பணித்துறையின் (நீர் வள ஆதார அமைப்பு) நீர்நிலை அரசு புறம்போக்கு ஆக்கிரமிப்பாகும். இதில் 7 ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டன. இதில் ஆக்கிரமித்து கட்டப்பட்ட படிக்கட்டுகள், வீட்டு வாசல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக குடோனின் ஒரு பகுதி, கிரில் கேட், செப்டிக் டாங்க் போன்றவை கட்டப்பட்டுள்ளன. மேற்கண்ட ஆக்கிரமிப்புதாரர்களுக்கு வரும் 25.10.2022 முதல் உரிய அறிவிப்பு வழங்கி மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை மாநகராட்சியால் அகற்றிடவும், பொதுப்பணித்துறையின் இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை பொதுப்பணித்துறையுடன் சேர்ந்து ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேற்கண்ட மாநகராட்சியில் உள்ள ஆக்கிரமிப்புகளை இன்னும் 45 நாட்களில் அகற்றப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் மண்டலம் 2 உதவி ஆணையாளரான எனது 18.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது எழுத்து மூலமான வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

6) திருச்சிராப்பள்ளி, மண்டலம் –02 உதவி ஆணையர் தனது 18.10.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்ககண்டவாறு தெரிவித்துள்ளார்:

"திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம் 2, மற்றும் 3 வார்டு எண் 47 மற்றும் 46க்குட்பட்ட கொட்டப்பட்டு மற்றும் ஆலத்தூர் வருவாய் கிராமங்கள் வார்டு AF/2ல் கட்டுப்பட்ட கொட்டப்பட்டு பெரியகுளம் முதல் வார்டு T பிளாக் 46, நகரளவு எண்.6/4ல் மாவடி குளம் வரை உள்ள நீர்நிலை அரசு புறம்போக்கு வாய்க்காலில் (பொதுப்பணித்துறை) (நீர்வள ஆதார அமைப்பு)

திருச்சிராப்பள்ளி கோட்டம் நகர சார் ஆய்வாளரால் 17.10.2022 மற்றும் 18.10.2022 ஆகிய தேதிகளில் நில அளவை பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனில் வார்டு AF பிளாக் 21,22,23,29 வார்டு U/9 மற்றும் வார்டு T பிளாக் 43,44 மற்றும் 45 ஆகிய பகுதிகளில் ஆக்கிரமிப்புகள் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பிரிவு 4 இளநிலை பொறியாளருடன் குறியீடு (Marking) செய்யப்பட்டன. மேற்படி ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எதிர்வரும் 25.10.2022 முதல் அரசு வழிகாட்டுதலின்படி மற்றும் மாநகராட்சி விதிகளின்படி உரிய நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்படும் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுக்குழு அலுவலகம் 2மற்றும் 3 நகர சார் ஆய்வாளர் மற்றும் பிரிவு 4 இளநிலை பொறியாளர்களின் அறிக்கைகளையும் இத்துடன் சமர்ப்பித்துள்ளேன். மேலும் ஆக்கிரமிப்புதாரர்கள் (7 நபர்கள்) முழு விவரங்கள், ஆக்கிரமிப்பின் தன்மைக்கான வண்ண புகைப்படங்கள் (colour photographs) சமர்ப்பித்துள்ளேன் என்பதையும் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் மனு, திருச்சிராப்பள்ளி ஸ்ரீரங்கம் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் மற்றும் இளநிலைப்பொறியாளர்கள், நகரசார் ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன:

மனுதாரர் தனது புகார் மனுவில் கொட்டப்பட்டு கிராமத்தில் உள்ள பெரியகுளம் முதல் மாவடி குளம் வரை செல்லும் வாய்க்காலில் பல பகுதிகள் ஆக்கிரமிப்பு செய்து உள்ளதால் வெள்ளம் நீர்நிலை ஆக்கிரமிப்பு குறித்த முழு தகவலும் இருந்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கும் பொன்மலை கோட்ட உதவி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்தும் மற்றும் பெரியகுளம் முதல் மாவடி குளம் வரை செல்லும் வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்பு அகற்ற உத்திரவு வழங்கும் படி கோரியுள்ளார்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி முன்னாள் பொன்மலை கோட்டம் தற்போது மண்டலம்–2 கொட்டப்பட்டு கிராமத்தில் உள்ள பெரியகுளம் முதல் மாவடி குளம் வரை செல்லும் வாய்க்காலில்(பொதுப்பணித்துறை) பல பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட ஆக்கிரமிப்பு பொதுப்பணித்துறையின் (நீர் வள ஆதார அமைப்பு) நீர் நிலை அரசு புறம்போக்கு ஆக்கிரமிப்பாகும் என்பதும் தெளிவாகிறது. மேற்கண்ட ஆக்கிரமிப்புதாரர்களுக்கு உரிய அறிவிப்பு வழங்கி மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை மாநகராட்சியால் அகற்றிடவுடம் பொதுப்பணித் துறையின் இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை பொதுப்பணித்துறையுடன் சேர்ந்து 60 நாட்களுக்குள் முறையாக ஆக்கிரமிப்புகள் அகற்றிட நடவடிக்கை மேற்கொண்டு அதன் விவரத்தினை அனுப்பி வைக்குமாறு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை இதுவரை அகற்றிட நடவடிக்கை எடுக்காமல் இருந்துள்ள சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்றம் உத்தரவிடுகிறது.

The encroachments on the Corporation lands should be evicted within a month's time failing which the field personnel of the Local Body should be charge sheeted suitably. The Commissioner, Tiruchirapalli Corporation is directed to launch disciplinary proceedings against the officials concerned who were slack, indifferent and inactive for so long, nearly ( 1 ) year after the submission of the report by the area Thasildar to the Corporation of Trichirapalli. amounting to lack of devotion to duties, indicating indirect

collusion and insensitivity to the epidemic of encroachments especially on the Corporation lands.

2022-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு C. பிரபு,
   த/பெ. செல்லக்கண்ணு,
   எண்.17–B. காளியம்மன் கோவில் தெரு,
   கொட்டப்பட்டு,
   திருச்சிராப்பள்ளி 620 004.
2. ஆணையர்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.
3. துணை ஆணையர்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி
4. உதவி ஆணையர்,
   வார்டுக்குழு அலுவலகம் II
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.
5. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
6. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்